**PROCEEDING OF THE PUBIC HEARING MEETING CONDUCTED FOR OBTAINING THE EVIRONMENTAL CLEARANCE FROM THE STATE ENVIRONMENTAL IMPACT ASSESMENT AUTHORITY SEIAA-TN FOR PROPOSED MINING PROJECT OF THE UNIT M/S. J M MINERALS, EXTENT: 3.00.0 HA S.F.NOS. 5/1,5/2, & 4/2 OF CHOKKANTHANGAL VILLAGE, MARAKKANAM TALUK, VILLUPURAM DISTRICT**

**Name of the Project:**

Proposed to mining project of Rough Stone and Gravel quarry Belongs to M/s. J M Minerals Extent: 3.00.0 HA S.F.NOS. 5/1,5/2, & 4/2 of Chokkanthangal Village, Marakkanam Taluk, Villupuram District

**Venue:** M/s. V.R.M Mahal A/c, Nadukuppam Road, Siruvadi – Murukeri, Marakkanam Taluk, Villupuram District - 604301

**Date & Time:** 30.05.2025 - 11.00 A.M.

**Present:**

| | | |
|---|---|---|
| 1. | Dr. Divyanshu Nigam., I.A.S., | Sub Collector,<br>Tindivanam |
| 2. | Dr.S.Rajendiran, M.E, Ph.D., | District Environmental Engineer,<br>Tamilnadu Pollution Control Board,<br>Villupuram |
| 3. | Er. S. Elaiyaraja., B.E., M.E., | Assistant Environmental Engineer,<br>Tamilnadu Pollution Control Board,<br>Villupuram |
| 4. | Er. P. Ramkumar, B.E.,<br>M.Tech.,, | Assistant Engineer,<br>Tamilnadu Pollution Control Board,<br>Villupuram |
| 5. | Er.S. Sangavi, B.E., M.Tech.,, | Assistant Engineer,<br>Tamilnadu Pollution Control Board,<br>Villupuram |

| | | |
|---|---|---|
| 6. | Mr. N. Dinesh Babu | Assistant,<br>O/o. District Environmental Engineer,<br>Tamilnadu Pollution Control Board,<br>Villupuram |
| 7. | Mr. M. Sadagopan | Typist, O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Villupuram |
| 8. | K. Abirami | Functional Area Expert,<br>M/s Global Mining Solution, Omalur, Salem-636455 |
| 9. | Mr. V. Vengatesh | Geologist,<br>M/s Global Mining Solution, Omalur, Salem-636455 |
| 10. | Mr. P.S. Jayaraman | The Managing Partner<br>M/s. J M Minerals. |
| 11. | Public and Environmentalists | 64 Persons (List Enclosed) |

The District Environmental Engineer (DEE), Tamil Nadu Pollution Control Board, Villupuram District has welcomed the Sub Collector, Tindivanam Government Officials, General Public and NGO's/ Environmentalist for the Public hearing and informed that the unit of Proposed project of Rough Stone and Gravel quarry in the Survey Numbers: 5/1, 5/2 & 4/2, Over an Extent of 3.00.0 Hectares, Chokkanthangal Village, Marakkanam Taluk, Villupuram District by Tvl. J M Minerals, Rough Stone and Gravel quarry. **This activity attracts** Environmental Impact Assessment Notification 2006, as amended under the category "B1" in the schedule 1(a) of the said notification.

Furthermore, the DEE, TNPCB, Villupuram, has informed that the SEIAA-TN issued the Terms of Reference (ToR) with a public hearing for preparing the Environmental Impact Assessment (EIA) report for the aforementioned activity under the Environmental Impact Assessment Notification, 2006. The ToR was issued on 22.10.2024. The project proponent has submitted the draft EIA report to the office of the DEE, TNPCB, Villupuram. A public notice for the public hearing, scheduled on

27.11.2024, was published in *The Indian Express* and *Daily Thandhi* on 29.04.2025 with the approval of the Sub Collector, Tindivanam. This public hearing is for the proposed industry M/s. Tvl. J M Minerals and public announcements have been made via loudspeakers and pamphlets distributed in the surrounding villages.

The District Environmental Engineer has informed that the details of the proposed project and the Environmental Impact Assessment (EIA) study conducted by the EIA consultant will be explained through a PowerPoint presentation by the project proponent/EIA consultant. Furthermore, the DEE stated that after the presentation, the public can express their views, suggestions, and comments on the project, either verbally or in writing, one by one. Additionally, he informed that the opinions and suggestions of the public and environmentalists will be recorded and forwarded to the SEIAA-TN.

The Sub Collector requested the project proponent to explain the detail of the project and the EIA study conducted by them to the public in detail.

The representative of project proponent explained the summary of the project and informed that on behalf of the project proponent Mrs K. Abirami, Functional Area expert of M/s Global Mining Solutions, Salem has Explained about the project and he welcomed the District Collector, the District Environmental Engineer, General Public, Environmentalists and other Government Officials and explained the details of the project with help of power point presentation.

The Sub Collector of Tindivanam has invited members of the public to present their views, suggestions, or comments regarding the above said proposal/project in a detailed and organized manner. Participants may express their opinions either verbally or in writing. Before presenting, individuals are kindly requested to provide their full name and address for official records.

**The following are the views expressed by the public:**

1. **Mr. Kalyanasundaram, Alagiyapakkam Village**
    - He stated that since the quarry is operating without causing any disturbance to the general public, he has not been affected in any way. Therefore, he expressed his support for the project.

2. **Mr. E. Ravichandran, Nalmukkal Village**

- He mentioned that he is a member of a farmers' association and stated that he was unclear whether the project was on government lease or patta lease land.
- He further alleged that although the public hearing was announced using an auto with a loudspeaker, the quarry owners stopped the vehicle outside the village and sent it back.
- He added that the hearing location was not close to the project site and was held in an area unaffected by the project, preventing many affected farmers from attending.

3. **Mr. N. Bhaskar, Sokkandhankal Village**

- He said that due to lack of local employment opportunities, villagers are forced to migrate for jobs. He requested that permission be granted for the project so that local employment could be generated.
- He expressed his support for the project.

4. **Mr. Dhanasekar, Keel Arungunam Village**

- He said that the project would not cause any impact to the village and expressed his support for the project.

5. **Mrs. Hemalatha, Kolathur Village**

- She stated that due to lack of job opportunities, educated youth from the village are migrating to other towns, and this project should help create local employment opportunities.
- She expressed her support for the project.

6. **Mr. Rajkumar, Keel Arungunam Village**

- He stated that the youth and elderly in the village are unemployed and hoped the project would create job opportunities.
- He expressed his support for the project.

**7. Mr. Madhimohan, Vadakolappakkam Village**

- He emphasized the need to provide employment for the local educated youth through the project.
- He expressed his support for the project.

**8. Mrs. Aruljothi, Kolathur Village**

- She said that many educated youth are migrating to Chennai for jobs and urged that the project should offer local employment.

**9. Mrs. Prema, Vannippur Village**

- She requested the project proponent to implement the project without causing any harm to the public.
- She expressed her support for the project.

**10. Mr. Nagaraj, Alagiyapakkam Village**

- He alleged that a stream in the village was completely blocked with soil by the quarry operators for their use.
- He stated that he has submitted petitions regarding this issue to the Chief Minister's Cell, Sub-Collector, Tahsildar, and the District Environmental Engineer's Office, but no action has been taken.
- He mentioned that, with the support of the villagers, a plan has recently been proposed to construct a new bridge across the deepened stream. He also stated that this matter was reported in the *Dinamalar* newspaper and that he received a response from the Sub-Collector after submitting a petition regarding the same
- He further requested that appropriate and timely action be taken on petitions received from the public from time to time.

**11. Mr. E. Bhaskar, Alagiyapakkam Village**

- He requested that there be a sufficient buffer between the project site and nearby agricultural lands.

- He also requested that advance notice be given to nearby farmers before blasting operations and that water bodies and agricultural lands should not be affected.

**12. Mr. Selvam, Nalmukkal Village**

- He complained that dust from the quarry is settling on nearby agricultural lands, affecting the yield. Despite multiple complaints, no action has been taken.
- He noted that dust pollution is already high from the existing quarry, and now permission is being sought for a new one.
- He warned that increased depth from quarrying would lower the groundwater level, affecting drinking water supply and livelihoods. He requested proper control of pollution from quarry activities.

**13. Miss Ashwini, Student of Geology, Presidency College, from Brahmadesam Village**

- She said the purpose of the meeting is to discuss how to control pollution, and that every project has both pros and cons.
- She emphasized that there are several solutions to control dust from quarrying and suggested involving a geologist or environmentalist to guide operations.
- She stated that earlier quarries were operated without much knowledge, whereas now 75% of owners are educated and 25% are highly educated. So, with expert guidance, pollution can be effectively controlled.
- She mentioned a recent strike by quarry operators demanding price control, which was withdrawn within 7 days due to public hardship.
- She welcomed the project as a geology student and requested that the government facilitate internships for students like her.
- She expressed her support for the project.

**Written Comments from the Public:**

| S. No | Name & Location | Remarks |
|---|---|---|
| 1 | Mr. S. Venkata Subbiah, President, | Supported the project and requested |

| | | |
|---|---|---|
| | Poojjitha Swatchananda Seva Society, Kadapa, Andhra Pradesh | plantation of trees around the site. |
| 2 | Mr. S. Vamsi Krishna, The Green Planet, Kadapa | Supported the project and recommended CSR funds to benefit the local community and promote tree plantation. |
| 3 | Mr. B. Durga Prasad, Lipakshi Environmental Rural Development Society | Supported the project and requested extensive greenbelt development. |
| 4 | SNBCS Society for Nature and Biodiversity Conservation, Tirupati District | Supported the project and urged for use of effective air pollution control measures. |
| 5 | Mr. D. Malarthavan, District Coordinator, Bharathiya Nagarika Seva Sangam, Chennai | Supported the project and requested local employment, road facilities, and support for government schools. |
| 6 | Mr. B. Subbaramaiah, Director, Rural Upliftment Network Society, Tirupati | Supported the project with emphasis on green development and proper air pollution control. |
| 7 | Mr. A.P. Rajendran, Founder-President, Bharathiya Nagarika Seva Sangam, Tirupati District | Supported the project with focus on greenery and pollution control. |
| 8 | Mr. S.K. Rahoom, President, Navodaya Charitable Trust, Krishna District | Supported the project, requested plantation and CSR fund utilization for locals and employment. |
| 9 | Mr. S. Inbasekaran, District Coordinator, Bharathiya Nagarika Seva Sangam, Ranipet | Supported the project and emphasized CSR usage for locals, plantation, and employment. |
| 10 | Mr. M. Muthu Raja, District Coordinator, Bharathiya Nagarika Seva Sangam, Ramanathapuram | Supported the project with suggestions on CSR for local welfare and afforestation. |
| 11 | Mrs. A. Hemalatha, Kolathur Village, Marakkanam Taluk, Villupuram District | Requested employment within her native village as there are currently no local job opportunities. |
| 12 to 16 | Mr. M. Manimaran, Mr. Ashok Sekar, Mr. Rajkumar, Mr. D. Karthikeyan, and Mr. V. Deivaprakash | Expressed their support orally and requested employment and local development. |

**Thereafter no views/comments were raised.**

Finally the DEE, TNPCB, Villupuram summarized views, suggestion and responses of the public about the Project and also informed that the said views,

suggestion and responses of the public are recorded through video-graphy and the same will be sent to the State Environmental Impact Assessment Authority, Tamilnadu along with the written representation received from the Public.

Furthermore, the DEE, TNPCB, Villupuram has informed that as per the public notice in the newspaper for this project the proceeding of the public hearing will be made displayed at the District Collectorate Office - Villupuram, Marakanam Panchayat Union office, Marakanam Taluk office, Chokkanthangal Village Panchayat Office and Office of the District Environmental Engineer, TNPCB, Villupuram, and also in the TNPCB website of www.tnpcb.gov.in. Commands, if any, on the proceeding may be sent directly to the regulatory authorities (Member Secretary, State Environmental Impact Assessment Authority –TamilNadu / MoEF&CC) and the applicant concerned.

2/6/25

District Environmental Engineer,
Tamil Nadu Pollution Control Board,
Villupuram.

Sub Collector,
Tindivanam

**Enclosures:**

1. Copy of press release (Public Notice published in the daily Newspaper Tamil & English dated 29.04.2025 for notifying the public hearing meeting.
2. Attendance sheet at the public hearing (Total pages 5 & 71Persons).
3. Audio & Video stored in the Pendrive of the public hearing proceedings.
4. Photographs of the public hearing proceedings.
5. Soft and Hard copies of EIA Report, Executive Summary in English & Tamil, submitted by the Project Proponent.

**விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் வட்டம், சொக்கந்தாங்கல் கிராமம், சர்வே. எண்கள் 5/1, 5/2 மற்றும் 4/2 ல் 3.00.00 ஹெக்டேர் பரப்பளவில் தி தி/ள் ஜெ. எம். மினரல்ஸ் சாதாரண கல் மற்றும் சரளை குவாரி உத்தேசிக்கப்படுவது குறித்து மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறுதல் தொடர்பாக 30.05.2025 அன்று நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்ட நடவடிக்கையின் விபரங்கள்**

**திட்டத்தின் பெயர்:** விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் வட்டம், சொக்கந்தாங்கல் கிராமம், சர்வே. எண்கள் 5/1, 5/2 மற்றும் 4/2 ல் 3.00.00 ஹெக்டேர் பரப்பளவில் தி/ள் ஜெ. எம். மினரல்ஸ் சாதாரண கல் மற்றும் சரளை குவாரி நிறுவப்படவுள்ளது.

**இடம்:** தி/ள் வி.ஆர்.எம் மஹால் A/c, நடுக்குப்பம் சாலை, சிறுவாடி - முருக்கேரி, மரக்காணம் வட்டம், விழுப்புரம் மாவட்டம் – 604301.

**நாள் மற்றும் நேரம் :** 30/05/2025 - காலை 11.00 மணி

**பங்கேற்றோர்:**

**திருவாளர்கள்**

| | | |
|---|---|---|
| 1. | திவ்யான்ஷூ நிகம், இ.ஆ.ப., | சார் ஆட்சியர்,<br>திண்டிவனம். |
| 2. | Dr.செ.இராசேந்திரன், எம்.இ.,பி.எச்.டி., | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விழுப்புரம். |
| 3. | திரு. S. இளையராஜா, | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விழுப்புரம். |
| 4. | திரு. P.ராம்குமார், | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விழுப்புரம். |

| | | |
|---|---|---|
| 5. | திரு. M. சங்கவி, | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விழுப்புரம். |
| 6. | திரு. நா. தினேஷ் பாபு | உதவியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விழுப்புரம். |
| 7. | திரு. ம. சடகோபன், | தட்டச்சர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விழுப்புரம். |
| 5. | கே. அபிராமி | செயல்பாட்டு பகுதி நிபுணர்,<br>(Functional Area Expert)<br>தி/ள் குளோபல் மைனிங் சொலுஷன்ஸ்,<br>ஓமலூர், சேலம் - 636455. |
| 6. | திரு. வே. வெங்கடேஷ் | புவியியலாளர் |
| 7. | திரு. P. S. ஜெயராமன், | நிர்வாக பங்குதாரர்,<br>தி/ள் ஜெ. எம். மினரல்ஸ் சாதாரண கல் மற்றும் சரளை குவாரி, சொக்கந்தாங்கல் கிராமம். |
| 7. | பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் | (63 நபர்களின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விழுப்புரம் அவர்கள் சுற்றுச்சூழல் அனுமதிபெறும் பொருட்டு நடைபெறும் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு தலைமை வகிக்கும் மதிப்பிற்குரிய சார் ஆட்சியர், திண்டிவனம் அவர்களையும், பங்கேற்கவந்துள்ள பொதுமக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பிற துறையைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் அனைவரையும் வரவேற்று விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் வட்டம், சொக்கந்தாங்கல் கிராமம், தி/ள் ஜெ. எம். மினரல்ஸ் சாதாரண கல் மற்றும் சரளை குவாரி, சர்வே. எண்கள் 5/1, 5/2 மற்றும் 4/2 ல் 3.00.00 ஹெக்டேர் பரப்பளளவில் நிறுவப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்து கீழ்க்கண்ட விபரங்களையும் தெரிவித்தார்.

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை 2006ன்படி வகை B1 மற்றும் அட்டவணை 1(a) இன் கீழ் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டத்தின் செயல்பாட்டிற்கான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையை மக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்தி தயாரிப்பிற்கான குறிப்பு விதிமுறைகளை Terms of Reference (TOR) 22.10.2024 அன்று வழங்கியுள்ளது.

மேலும், நிறுவனம் வரைவு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரித்து பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்த தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திடம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க இப்பொதுமக்கள் கருத்து கேட்புக், கூட்டம் நடைபெறவிருக்கிறது.

இதுதொடர்பாக, சார் ஆட்சியர், திண்டிவனம் ஒப்புதலின் படி, தி/ள் ஜெ. எம். மினரல்ஸ் சாதாரண கல் மற்றும் சரளை குவாரி நிறுவனத்திற்கு பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டமானது விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் வட்டம், சிறுவாடி – முருக்கேரி, நடுக்குப்பம் சாலை, தி/ள் வி. ஆர். எம் A/c மஹாலில் 30.05.2025 அன்று காலை 11.00 மணியளவில் நடைபெறும் என்று "இந்தியன் எக்ஸ்பிரஸ்" மற்றும் "தினத்தந்தி" ஆங்கில மற்றும் தமிழ் நாளேடுகளில் 29.04.2025 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டது. மேலும் அப்பகுதியிலுல்ல மக்களுக்கு இத்தகவல் ஒலிபெருக்கி மற்றும் துண்டுப்பிரசுரம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர், இக்கூட்டத்தில் தி/ள் ஜெ. எம். மினரல்ஸ் சாதாரண கல் மற்றும் சரளை குவாரி நிறுவனத்தின் செயல்பாட்டு பகுதி நிபுணர் (Functional Area Expert), தி/ள் குளோபல் மைனிங் சொலுஷன்ஸ், சேலம் அவர்கள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை விரிவாக எடுத்துரைப்பார்கள் என்று கூறினார். அதன் பின்னர் பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தங்களது கருத்துகளை வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ பொதுமக்கள் தங்கள் பெயர், ஊரின் பெயர்

ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார். தங்களுடைய கருத்துக்கள் முறையாக பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவித்தார்.

சார் ஆட்சியர், திண்டிவனம் அவர்கள் இத்திட்டத்தின் விவரம் மற்றும் திட்டத்தின் நிர்வாகத்தினரால் நடத்தப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை தொடர்பான விவரங்களையும் பொதுமக்களுக்கு விளக்கும் படி கேட்டுக்கொண்டார்.

திருமதி. கே. அபிராமி, செயல்பாட்டு பகுதி நிபுணர் (Functional Area Expert), தி/ள் குளோபல் மைனிங் சொலுஷன்ஸ், சேலம் அவர்கள் சார் ஆட்சியர், திண்டிவனம் அவர்களுக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பிற துறையைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் மற்றும் பங்கேற்க வந்துள்ள பொதுமக்கள் அனைவரையும் வரவேற்று நிழற்பட விளக்க காட்சி மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்திட்டம் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

அதன்பின்னர் சார் ஆட்சியர், திண்டிவனம், அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ, வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துகள் பதிவு செய்யும் முன் பொதுமக்கள் தங்கள் பெயர், தங்கள் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று தெரிவித்தார்.

அதன்படி பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை கீழ்க்கண்டவாறு தெரிவித்தனர்.

<u>1. திரு. கல்யாண சுந்தரம், அழகியபாக்கம் கிராமம்</u>

- இவர் கூறுகையில், பொதுமக்களுக்கு எவ்வித இடையூறும் இன்றி குவாரி நடத்துவதனால் தங்களுக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என்று இத்திட்டத்திற்கு தனது ஆதரவை தெரிவித்தார்.

**2. திரு. E. ரவிச்சந்திரன், நல்முக்கல் கிராமம்,**

- இவர் கூறுகையில், தான் ஒரு விவசாய சங்க உறுப்பினர் என்றும், திட்டம் அரசின் குத்தகையா அல்லது அல்லது பட்டா குத்தகையா என்று தனக்கு தெளிவாக தெரியவில்லை என்று குறிப்பிட்டார்.
- ஒலிப்பெருக்கி மூலம் ஆட்டோ வாகனத்தை பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் தெரிவிக்கப்பட்டதை, குவாரி உரிமையாளர்கள் ஊரின் வெளியிலேயே தடுத்து நிறுத்தி, வாகனத்தை திருப்பி அனுப்பி விட்டதாக குறிப்பிட்டார்.
- மேலும், கருத்துக் கேட்பு கூட்டம் நடைபெறும் இடமானது திட்டத்திற்கு தொடர்புடைய குறுவட்ட அளவில் நடைபெறவில்லை என்றும், இத்திட்டத்தினால் பாதிப்பு ஏற்படாத ஒரு இடத்தில் இந்த கூட்டம் நடைபெறுவதனால் விவசாயிகள் அதிக அளவில் இக்கூட்டத்தில் பங்கேற்க இயலவில்லை என்று என்று தெரிவித்தார்.

**3. திரு. N. பாஸ்கர், சொக்கந்தாங்கல் கிராமம்,**

- இவர் கூறுகையில், எங்கள் ஊரில் வேலைவாய்ப்பு இல்லாததன் காரணத்தால் நாங்கள் வேலை தேடி வெளியூருக்கு செல்ல வேண்டிய நிலை உள்ளது என்றும், திட்டத்திற்கு அனுமதி கிடைத்தால் எங்களுக்கு சொந்த ஊரிலே வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும், இத்திட்டத்திற்கு அனுமதி வழங்கிட கோரினார்.
- இவர் இத்திட்டத்திற்கு தனது ஆதரவை தெரிவித்தார்.

**4. திரு. தனசேகர், கீழ்அருங்குணம் கிராமம்,**

- இவர் கூறுகையில், இத்திட்டம் அமைவதனால் எங்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்று கூறி இத்திட்டத்திற்கு தனது ஆதரவை தெரிவித்தார்.

5 திருமதி. ஹேமலதா, கொளத்தூர் கிராமம்,

- இவர் கூறுகையில், எங்கள் ஊரில் உள்ள படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பிற்காக வெளியூருக்கு செல்வதால், அவர்களுக்கு இத்திட்டத்தின் மூலம் வேலைவாய்ப்பு வழங்கிட வழிவகை செய்திட வேண்டும் என்று கூறினார்.
- இவர், இத்திட்டத்திற்கு தனது ஆதரவை தெரிவித்தார்.

6 திரு. ராஜ்குமார், கீழ்அருங்குணம் கிராமம்,

- இவர் கூறுகையில், எங்கள் ஊரில் உள்ள படித்த இளைஞர்கள், முதியவர்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் உள்ளதாகவும், இத்திட்டத்தின் மூலம் வேலைவாய்ப்பு அவர்களுக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளதாக கூறினார்.
- இவர், இத்திட்டத்திற்கு தனது ஆதரவை தெரிவித்தார்.

7. திரு. மதிமோகன், வடகொளப்பாக்கம் கிராமம்,

- இவர் கூறுகையில், எங்கள் ஊரில் உள்ள படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பிற்காக வெளியூருக்கு செல்வதால், அவர்களுக்கு இத்திட்டத்தின் மூலம் வேலைவாய்ப்பு வழங்கிட வழிவகை செய்திட வேண்டும் என்று கூறினார்.
- இவர், இத்திட்டத்திற்கு தனது ஆதரவை தெரிவித்தார்.

8. திருமதி. அருள்ஜோதி, கொளத்தூர் கிராமம்,

- இவர் கூறுகையில், எங்கள் ஊரில் உள்ள படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பிற்காக சென்னை செல்வதால், அவர்களுக்கு இத்திட்டத்தின் மூலம் வேலைவாய்ப்பு வழங்கிட வழிவகை செய்திட வேண்டும் என்று கூறினார்.

**9. திருமதி. பிரேமா, வன்னிப்பூர் கிராமம்,**

- இவர் கூறுகையில், இத்திட்டத்தினை பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் இன்றி நடத்துமாறு திட்டத்தின் உரிமையாளரை கேட்டுக் கொண்டார்.
- இவர், இத்திட்டத்திற்கு தனது ஆதரவை தெரிவித்தார்.

**10. திரு. நாகராஜ், அழகியபாக்கம் கிராமம்,**

- இவர் கூறுகையில், எங்கள் ஊரில் உள்ள ஒரு நீரோடையானது குவாரி உரிமையாளர்கள் பயன்பாட்டிற்காக முற்றிலுமாக மண்ணால் மூடப்பட்டு விட்டது, அது குறித்து நான் பல ஆண்டு காலமாக முதல்வரின் முகவரி, சார் ஆட்சியர் அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம் என அனைத்து அலுவலகங்களுக்கும் புகார் மனுவினை அளித்துள்ளோன்.
- ஆனால், எனது புகார் மனுவின் எவ்வித நடவடிக்கையும் இதனால் வரை மேற்கொள்ளப்படவில்லை என்று கூறினார்.
- சமீபத்தில் எனது ஊர்மக்களின் ஆதரவுடன் ஆழப்படுத்தப்பட்ட நீரோடையின் குறுக்கே மீண்டும் பாலம் கட்ட திட்டமிடப்பட்டுள்ளதை அறிந்து இச்செய்தினை தினமலர் நாளிதழிலும், சார் ஆட்சியர் தங்களுக்கும் மனு அளித்தற்கு தங்களிடமிருந்து பதில் கிடைத்தாகவும் குறிப்பிட்டார்.
- மேலும், பொதுமக்களிடம் இருந்து அவ்வப்போது பெறப்படும் மனுக்களுக்கு உடனடியாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார்.

**11. திரு. E. பாஸ்கர், அழகியபாக்கம் கிராமம்,**

- இவர் கூறுகையில், திட்டம் அமைய உள்ள இடத்திற்கும் விவசாய நிலங்கள் உள்ள பகுதிக்கும் போதிய இடைவேளி இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

- மேலும், குவாரியில் வெடி வைக்கும் போதும் அருகில் உள்ள விவசாயிகளுக்கு முன் அறிவிப்பு வழங்கப்பட வேண்டும் என்றும், நீரோடைகள், விவசாய நிலங்கள் பாதிப்பு ஏற்படாத வண்ணம் திட்டத்தினை செயல்படுமாறு சார் ஆட்சியர் அவர்களை கேட்டுக் கொள்வதாக கூறினார்.

**12. திரு. செல்வம், நல்முக்கல் கிராமம்,**

- இவர் கூறுகையில், குவாரியில் இருந்து வெளியேறும் தூசுக்கள் அருகில் உள்ள விவசாய நிலங்களில் படிந்து, விளைச்சல் பாதிப்பு ஏற்படுகிறது. மேலும், பல முறை இதுகுறித்து புகார் அளித்தும், இது வரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று கூறினார்.
- ஏற்கனேவே உள்ள குவாரியில் இருந்து வெளிவரும் தூசுக்கள் அதிக அளவில் உள்ளதாகவும், தற்போது மீண்டும் புதியதாக ஒரு குவாரிக்கு அனுமதி வழங்க இக்கூட்டம் நடைபெறுகிறது என்று கூறினார்.
- தற்போது உள்ள குவாரிகளில் ஆழம் அதிகமாக உள்ளதால் நிலத்தடி நீர் மட்டம் பாதிப்படையும் என்றும், மக்கள் வாழ்வாதாரம் பாதிப்படையும், குடிநீர் பஞ்சம் ஏற்படும் அவல நிலை அடைய வாய்ப்பு உள்ளதாகவும், இவைகளை கருத்தில் கொண்டு, குவாரியின் செயல்பாடுகளால் ஏற்படும் மாசு முறையாக கட்டுப்படுத்துமாறு கேட்டுக் கொண்டார்.

**13. செல்வி, அஸ்வினி, பிரம்மதேசம் கிராமம், புவியியல் படிக்கும் மாணவி – பிரசிடென்சி கல்லூரி**

- இவர் கூறுகையில், தற்போது எதற்காக நடைபெறுகிறது என்றால், மாசு எப்படி கட்டுப்பத்துவது என்பதனை விவாதிக்க மட்டுமே ஆகும். எந்த ஒரு திட்டம் எடுத்துக்கொண்டாலும், நிறை குறை என இரண்டுமே இருக்கும்.

- குவாரியில் இருந்து வெளியேறும் தூசுக்கள் கட்டுப்படுத்த பல்வேறு தீர்வுகள் உள்ளன. அவற்றை குறிப்பிட்டு, நான் அவர்களை குவாரியினை இயக்க கூறுவோம். ஒரு புவியியலாளர் அல்லது ஒரு சுற்றுச்சூழலாளர் கொண்டு குவாரியினை இயக்குமாறு அவர்களை கேட்டுக் கொள்வோம்.
- இதற்கு முன் காலக்கட்டத்தில் இயக்கப்பட்ட குவாரிகள் அனைத்தும் நம் முன்னோர்களால் குறைந்த அடிப்படை அறிவை கொண்டு நடத்தப்பட்டவை. ஆனால், தற்போது உள்ள குவாரி உரிமையாளர்களில் 75 சதவீதம் படித்தவர்களாகவும், 25 சதவீதம் நன்கு படிதத்தவர்களாகவும் உள்ளதால், மாசு ஏற்படும் சூழல் ஏற்படாது என்று கூறுவதை விடவும், சீரிய முறையில் புவியியல் படித்த மாணவர்களால் ஏற்படும் நன்மை தீமைகளை விளக்கி கட்டுப்படுத்த முடியும் என்று கூறலாம்.
- சமீபத்தில் கூட குவாரி உரிமையாளர்கள் ஒன்று சேர்ந்து விலை ஏற்றத்தை குறைத்திட கோரி வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். 10 நாட்கள் அளவில் திட்டமிடப்பட்ட வேலை நிறுத்தம் 7 நாட்களிலேயே ஒட்டுநர்கள், வேலை ஆட்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது என்பதை உணர்ந்து அரசு வாபஸ் பெற்றது.
- ஆகவே, கட்டுமானப் பணிகளுக்கு மிகவும் முக்கியமானதாக உள்ள ஜல்லி குவாரிகளில் இருந்து தான் நமக்கு கிடைக்கும் என்பதனால் இத்திட்டத்தை ஒரு புவியியல் மாணவியாக தான் வரவேற்பதாக கூறினார்.
- மேலும், தன்னை போன்ற மாணவிகளுக்கு Internship அரசு தரப்பில் மிகவும் குறைந்த அளவிலேயே கிடைப்பதனால், அதற்கு வழிவகை செய்திட கேட்டுக் கொண்டார்.
- இவர் இத்திட்டத்திற்கு தனது ஆதரவை தெரிவித்தார்.

**கீழ்க்கண்ட பதினாறு பொதுமக்கள் தங்கள் கருத்தை எழுத்துப்பூர்வமாகத் தெரிவித்துள்ளனர்.**

| வ.எண் | பெயர் மற்றும் ஊர் | கருத்து |
|---|---|---|
| 1. | திரு. S. வெங்கட சுப்பையா, தலைவர், பூஜ்ஜிதா ஸ்வச்சானந்தா சேவா சொசைட்டி, 1/45, 123 வார்ட்ஸ், கோட்ஹ மாதவரம், சிடவட்டம், கடப்பா, ஆந்திர பிரதேசம். | இவர் முன்மொழியப்பட்ட திட்டத்திற்கு தனது ஆதரவைத் தெரிவித்ததுடன், அதிக அளவில் மரக்கன்றுகளை திட்டத்தை சுற்றி வளர்த்திட கேட்டுக் கொண்டார். |
| 2. | திரு. S. வம்சி கிருஷ்ணா, தி/ள் தி கிரீன் பிளாணட், என்விரான்மண்ட் புரோடக்ஷன் ஆர்கனைசேஷன், #2-3-739/2/266, எர்ராமுக்கபள்ளி, கடப்பா, ஆந்திர பிரதேசம். | இவர் முன்மொழியப்பட்ட திட்டத்திற்கு தனது ஆதரவைத் தெரிவித்ததுடன், மரக்கன்றுகளை வளர்த்திடவும் CSR நிதியினை உள்ளூர் மக்களுக்கு பயன் பெற வழிவகை செய்திட வேண்டும் என்று கூறினார். |
| 3. | திரு. B. துர்கா பிரசாத், தி/ள் லிபக்ஷி என்விரான்மெண்டல் ரூரல் டெவலப்மெண்ட் சொசைட்டி, பதிவு எண். 131/2013 | இவர் முன்மொழியப்பட்ட திட்டத்திற்கு தனது ஆதரவைத் தெரிவித்ததுடன், அதிக அளவில் மரக்கன்றுகளை திட்டத்தை சுற்றி வளர்த்திட கேட்டுக் கொண்டார். |
| 4. | தி/ள் SNBCS சொசைட்டி பார் நேச்சர் அன்ட் பயோடைவர்சிட்டி கன்சர்வேஷன், பதிவு எண். 331/2022 3-32 முசலிப்பேடு கிராமம், கன்டாடு அஞ்சல், எர்பேடு மண்டல், திருப்பதி மாவட்டம் – 517619. | இவர் முன்மொழியப்பட்ட திட்டத்திற்கு தனது ஆதரவைத் தெரிவித்ததுடன், பசுமை அபிவிருத்தி எய்திடவும், திட்டத்தின் உரிமையாளர் முறையாக காற்று மாசு தடுப்பு சாதனைங்களை பயன்படுத்தி இயக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். |

| | | |
|---|---|---|
| 5. | திரு. D. மலர்தவன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்,<br>தி/ள் பாரதிய நாகரிக சேவா சங்கம்,<br>எண். 43/15 புதுமணி குப்பம், 4வது தெரு, ராயபுரம், சென்னை – 600 013. | இவர் முன்மொழியப்பட்ட திட்டத்திற்கு தனது ஆதரவைத் தெரிவித்ததுடன், உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பு, சாலை வசதி, அரசு பள்ளிகளின் வளர்ச்சிக்கு உதவிடவும் உரிமையாளர் அவர்களை கேட்டுக் கொண்டார். |
| 6. | திரு. B. சுப்பாராமையா,<br>செயலாளர் மற்றும் இயக்குநர்,<br>ரூரல் அப்லிப்ச்மண்ட் நெட்வொர்க் சொசைட்டி, NGO, திருப்பதி. | இவர் முன்மொழியப்பட்ட திட்டத்திற்கு தனது ஆதரவைத் தெரிவித்ததுடன், பசுமை அபிவிருக்தி எய்திடவும், திட்டத்தின் உரிமையாளர் முறையாக காற்று மாசு தடுப்பு சாதனைங்களை பயன்படுத்தி இயக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். |
| 7. | திரு. A.P. ராஜேந்திரன்,<br>நிறுவனர் மற்றும் தலைவர்,<br><br>தி/ள் பாரதிய நாகரிக சேவா சங்கம்,<br>பதிவு எண். 301/2009<br>கிருஷ்ணகிரி காலணி, அன்ஜிமேடு அஞ்சல், எர்பேடு மண்டல், திருப்பதி மாவட்டம் – 517619. | இவர் முன்மொழியப்பட்ட திட்டத்திற்கு தனது ஆதரவைத் தெரிவித்ததுடன், பசுமை அபிவிருக்தி எய்திடவும், திட்டத்தின் உரிமையாளர் முறையாக காற்று மாசு தடுப்பு சாதனைங்களை பயன்படுத்தி இயக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். |
| 8. | திரு. S K ரஹீம், தலைவர்,<br>தி/ள் ட்ரஸ்ட் ஆப் நவோதயா சேரிடபிள் ட்ரஸ்ட்,<br>பதிவு எண். 87/2023<br>H-No -9-54/34 யூனியன் பேங்க் ஆப் இந்தியா, பென்ஸ் சர்கிள், பட்மாட்டா – 521456 | இவர் முன்மொழியப்பட்ட திட்டத்திற்கு தனது ஆதரவைத் தெரிவித்ததுடன், மரக்கன்றுகளை வளர்த்திடவும் CSR நிதியினை உள்ளூர் மக்களுக்கு பயன் பெற வழிவகை செய்திட வேண்டும் என்றும் வேலைவாய்ப்பிற்கு உதவிடவும் கேட்டுக் கொண்டார். |

| | | |
|---|---|---|
| 9. | திரு. S இன்பசேகரன்,<br>மாவட்ட ஒருங்கிணைப்பாளர்,<br>தி/ள் பாரதிய நாகரிக சேவா சங்கம்,<br>பதிவு எண். 301/2009<br>2/160A, மேல்கிராஸ் தெரு, மேளபுளம் புதூர் கிராமம், பனப்பாக்கம் (வழி), நெமிலி வட்டம், ராணிப்பேட்டை மாவட்டம் – 631052. | இவர் முன்மொழியப்பட்ட திட்டத்திற்கு தனது ஆதரவைத் தெரிவித்ததுடன், மரக்கன்றுகளை வளர்த்திடவும் CSR நிதியினை உள்ளூர் மக்களுக்கு பயன் பெற வழிவகை செய்திட வேண்டும் என்றும் வேலைவாய்ப்பிற்கு உதவிடவும் கேட்டுக் கொண்டார். |
| 10. | திரு. M முத்து ராஜா,<br>மாவட்ட ஒருங்கிணைப்பாளர்,<br>தி/ள் பாரதிய நாகரிக சேவா சங்கம்,<br>பதிவு எண். 301/2009<br>4, பெருமாள் நகர் ஸ்டிரீட், கமுதி,<br>ராமநாதபுரம் மாவட்டம் – 623 603. | இவர் முன்மொழியப்பட்ட திட்டத்திற்கு தனது ஆதரவைத் தெரிவித்ததுடன், மரக்கன்றுகளை வளர்த்திடவும் CSR நிதியினை உள்ளூர் மக்களுக்கு பயன் பெற வழிவகை செய்திட வேண்டும் என்றும் வேலைவாய்ப்பிற்கு உதவிடவும் கேட்டுக் கொண்டார். |
| 11. | திருமதி. அ.ஹேமலதா, கொளத்தூர் கிராமம், மரக்காணம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். | சொந்த ஊரில் வேலை வாய்ப்பு இன்றி கஷ்டப்பட்டு வருவதனால், திட்ட உரிமையாளர் அவர்களை தங்களுக்கு உள்ளூரிலேயே வேலை வழங்கும்படி கேட்டுக் கொள்வதாக குறிப்பிட்டுள்ளனர். |
| 12. | திரு. M. மணிமாறன், த.பெ. மதியழகன், அருங்குணம் பகுதி, சொக்கந்தாங்கல் கிராமம், மரக்காணம், விழுப்புரம் மாவட்டம். | |
| 13. | திரு. அசோக் சேகர்,<br>190 மாரியம்மன் கோவில் தெரு,<br>கீழ் அருங்குணம், விழுப்புரம் மாவட்டம். | |
| 14. | திரு. ராஜ்குமார், த.பெ. சிவா,<br>கீழ் அருங்குணம், விழுப்புரம் மாவட்டம். | |
| 15. | திரு. D. கார்த்திகேயன், த.பெ. தனசேகரன், பெருமுக்கல், திண்டிவனம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். | |
| 16. | திரு. V. தெய்வபிரகாஷ், த.பெ. விஜயன், கொளத்தூர் கிராமம், மரக்காணம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். | |

பின்னர் கருத்துக்கள் எதுவும் பெறப்படவில்லை.

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விழுப்புரம், திட்டம் குறித்த பொதுமக்களின் கருத்துகள், ஆலோசனைகளின் சுருக்கத்தை கூறினார். மேலும், இப்பொதுமக்களின் கருத்துகள், ஆலோசனைகள் ஆகியவை தொகுத்து, வீடியோ கிராஃபி மூலம் பதிவு செய்யப்பட்டு, மாநில சுற்றுச்சூழல் மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பபடும் என்றும் தெரிவித்தர். பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட எழுத்துப்பூர்வ கருத்துக்களையும் இதனுடன் சேர்த்து அனுப்பப்படும் என்று குறிப்பிட்டார்.

மேலும் மேற்குறிப்பிட்ட செய்தித்தாளில் வெளியிடப்பட்ட பொது அறிவிப்பின்படி, இப்பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் நடவடிக்கை குறிப்பின் நகலானது பொது மக்களின் பார்வைக்காக விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் - விழுப்புரம், மரக்காணம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், மரக்காணம் தாலுகா அலுவலகம், சொக்கந்தாங்கல் கிராம ஊராட்சி அலுவலகம், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விழுப்புரம் ஆகிய இடங்களில் வைக்கப்படும், மேலும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய இணையதளமான www.tnpcb.gov.in ல் வெளியிடப்படும். நடவடிக்கை குறிப்பின் மீதான கருத்துக்கள் ஏதேனும் இருந்தால், உறுப்பினர் செயலர், மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் தமிழ்நாடு / MoEF&CC மற்றும் சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரருக்கும் நேரடியாக அனுப்பலாம் என்று மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விழுப்புரம் கூறினார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
விழுப்புரம்.

சார் ஆட்சியர்,
திண்டிவனம்.

3/5

**<u>இதுதவிர கீழ்கண்ட விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.</u>**

1. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை வெளியீட்டின் நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள், நாள். 29.04.2025).
2. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு கலந்து கொண்டர்களின் வருகை பதிவேடு (5 பக்கங்கள் 71 நபர்கள்)
3. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் ஒலி மற்றும் ஒளிப்பட பெண்டிரைவ்.
4. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.
5. திட்ட நிறுவனத்தாரால் சமர்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).
6. பொதுமக்கள் தன்னார்வ தொண்டு நிறுவனம் / சுற்றுச்சூழல் ஆர்வலர்களிடமிருந்து மின்னஞ்சல், அஞ்சல் மற்றும் பொது மக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் பெறப்பட்ட 16 மனுக்கள்.